**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

O.S 456/2018

**பி.வா.சா.4**

| | |
|---|---|
| Name | : அசோக் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 07.07.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் தற்போது சுரண்டையில் முனிசபல் கமிஷனராக வேலை செய்து வருகிறேன். சீமை கருவேல மரங்களை அகற்றுவதற்காக எங்கள் அலுவலகத்தில் நில உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் நில உரிமையாளர் பெயர் சங்கரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான. அந்த அறிவிப்பு 03.02.2017 ம் தேதியில் வழங்கப்பட்டது என்றால் சரிதான்.அந்த அறிவிப்பை சங்கரன் என்பவர்தான் கையொப்பம் பெற்று பெற்றுக்கொண்டுள்ளார் எறன்றால் சரிதான். சங்கரன் அறிவிப்பை பெற்றுக்கொண்டு கருவேல மரங்களை அகற்றியுள்ளார் என்றால் சரிதான். சங்கரனுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு வேறு யாராலும் மறுக்கப்படவில்லை என்றால் சரிதான். சீமை கருவேல மரங்கள் தீமை குறித்து நாங்கள் பிரச்சாரம் நோட்டீஸ் வழங்கப்பட்டது என்றால் சரிதான். சங்கரனுக்கு நாங்கள் அனுப்பிய அறிவிப்பு சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சா.சா.ஆ.3 வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பபட்டு குறியீடு செய்யப்படுகிறது. பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சுரண்டை நகராட்சியில் நான் முனிசபல் கமிஷனராக 29.12.2025 ம் முதல் பணியாற்றி வருகிறேன். சங்கரனுக்கு அனுப்பிய அறிவிப்பில் சர்வே எண். குறிப்பிட்டு அனுப்படவில்லை என்றால் சரிதான். சங்கரன்தான் அந்த இடத்தின் உரிமையாளர் என்பதை தீர்மானிக்க எங்கள் அலுவலக கோப்பில் எந்த ஆதாரமும் கிடையாது

என்றால் சரிதான். எதன் அடிப்படையில் சங்கரனுக்கு உரிமையாளர் என்று அறிவிப்பு அனுப்பினோம் என்றால் அப்போதைய செயல் அலுவலர் அனுப்பியுள்ளார். எனக்கு தெரியாது. எங்களது அலுவலக கோப்பில் எதன் அடிப்படையில் சங்கரனுக்கு அப்போதைய செயல் அலுவலர் அனுப்பினார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரிதான். சீமை கருவேல மரங்களை சங்கரன் அகற்றிவிட்டார் என்று எந்த அறிக்கையும் எங்கள் அலுவலகத்தில் பெறப்படவில்லை என்றால் கேட்கவும் இல்லை, பெறப்படவும் வில்லை. சங்கரன்தான் தாவா பிரச்சனைக்குரிய சொத்தில் உரிமையாளர் என்பதை தீர்மானிக்கும் ஆவணம் எதுவும் எங்கள் அலுவலக கோப்பில் கிடையாது என்றால் சரிதான். நாங்கள் அனுப்பிய நோட்டீஸ்யை வைத்தும் மட்டும் சங்கரன்தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்று தீர்மானிக்க முடியாது என்றால் சரிதான். இந்த வழக்கிற்காக சங்கரன் இந்த வழக்கிற்கு பின்னிட்டு எங்களை அணுகி மோசடியான ஆவணம் எங்கள் மூலம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. சங்கரனுக்கு ஆதரவாக தவறான சாட்சியத்தினை அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் எனவே ஏற்புடையது கிடையாது என்றால் சரியல்ல. சா.சா.ஆ-3 ஆவணத்தில் அசல் எங்கள் அலுவலக கோப்பில் கிடையாது என்றால் உள்ளது. எங்கள் கோப்பில் இருக்கும் சா.சா.ஆ 3 அசலில் எங்கள் அலுவலக முத்திரை இல்லை என்றால் அதற்கு முத்திரை இடுவது கிடையாது. சா.சா.ஆ 3 முத்திரையிட்டு உண்மை நகல் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்பதால் எனது சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)K.சுதா ராணி
கூடுதல் சார்பு நீதிபதி
தென்காசி.